# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC No.122/2024**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : பேபி | Calling | : |
| Father/Husband's Name | : கோபாலஸ்ரீநிசன் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 3rd June 2026.

**எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்சமயம் ஈரோட்டில் வசித்து வருகிறேன். எனது கணவரின் சொந்த ஊர் கொளுஞ்சிக்காட்டுவலசு ஆகும். அ.சா.1 மரகதம் எனது மாமியார். ஆஜர் எதிரிகள் சுந்தரமூர்த்தி, கந்தசாமி ஆகியோர்களை தெரியும். கடந்த 24.08.2023ம் தேதி மாலை 4.00 மணி சுமாருக்கு நான் கொளுஞ்சிக்காட்டுவலசிற்கு சென்றிருந்த போது எனது மாமியார் மரகதம் எனது கணவர் கோபாலஸ்ரீநிசனுக்கு சொந்தமான இடத்தில் கந்தசாமி சுந்தரமூர்த்தி ஆகியோர்கள் வாசற்படி கட்டியதை எனது மாமியார் மரகதம் ஏன் எங்களுடைய இடத்தில் வாசற்படி கட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எனது மாமியார் மரகதத்தை சுந்தரமூர்த்தியும், கந்தசாமியும் தேவடியா முண்டை என கெட்ட வார்த்தையால் திட்டி பின் தலையில் அடித்து கீழே தள்ளிவிட்டுவிட்டார்கள். நான் எனது மாமியார் மரகதத்தை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தேன். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். 30.08.2023 அன்று என்னை போலீஸார் விசாரித்த போது சம்பவத்தை நேரடியாக பார்த்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது எனது மாமியாரை எதிரிகள் அடித்து கொண்டிருந்தார்கள். நான் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டுள்ளதற்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்து இருந்திருந்தால் போலீஸ் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றால் நான் போலீஸ் விசாரணையில் பார்த்தை

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.06.03 18:27:44 +0530

தான் சொன்னேன். அவ்வாறு ஒரு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், எதிரிகள் மீது சிவில் வழக்கு எங்களுக்கு சாதகமாக அமைய வேண்டும் என்பதால் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் மாமியாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் மூவரும சேர்ந்து ஆஜர் எதிரிகளை தாக்கியதில் எனது மாமியார் கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்திற்காக அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு தற்போது பொய்யாக எதிரிகள் தாக்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. என் மாமியாருக்கு அவ்வளவாக காது கேட்காது. எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்று சொல்வதற்கு என் மாமியாருக்கு காது கேட்காததால் தான் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் மூவரும் சேர்ந்து தாக்கியதால் தான் எதிரிகள் எங்கள் மீது கொடுத்த புகார் நிலுவையில் உள்ளது.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.03 18:27:49 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC No.122/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : மரகதம் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 3rd June 2026.

**எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கொளுஞ்சிக்காட்டுவலசில் குடியிருந்து காட்டு வேலை வருகிறேன். ஆஜர் எதிரிகள் கந்தசாமி, சுந்தர் ஆகியோர்களை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு வருடம், மாதம் தேதி ஞாபகம் இல்லை. மாலை 4.00 மணி சுமாருக்கு நான் எனது வீட்டிற்கு செல்லும் பாதையில் ஆஜர் எதிரிகள் வாசற்படி கட்டியதால் நான் எனது இடத்தில் எதற்காக வாசற்படி கட்டுகிறீர்கள் என்று கேட்டேன். அவர்கள் இருவரும் என்னை அடித்து கீழே தள்ளிவிட்டு தேவடியா முண்டை என கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். தடுக்க வந்த எனது தங்கை மகன் செந்திலையும் தங்கை மருமகள் பேபியையும் எதிரிகள் அடித்தார்கள்.

2. என்னை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீஸார் வந்து விசாரித்தார்கள். புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேளை என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு எதிரிகள் பங்காளி முறை ஆகும். அவர்கள் மீது தடம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கிற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். எதிரிகள் மீது தடத்தை குறுக்காட்டினார்கள் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் வாசற்படி கட்டிய இடம் எனது இடம் ஆகும். எனது

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.03 18:27:56 +0530

இடம் என்பதற்காக ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அது எனது இடம் இல்லை என்றும், ஊர்நத்தம் என்றும், அதன் சர்வே எண்.553/2019 காலையில் மொத்தம் 32 நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 32 நபர்களும் பொதுவாக அனுபவித்து வரவேண்டும் எனக்கும் மட்டும் தனிப்பட்ட முறையில் அது பாத்தியப்படாது என்றால் சரியல்ல, நான் சொந்தமான ரூ.15,000 கொடுத்து வாங்கிய இடம் அது. அவ்வாறு கிரையம் பெற்றிருந்தால் அந்த கிரைய பத்திரத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

2. நான், எனது மகன், மருமகள் பேபி ஆகியோர் சேர்ந்து மேற்படி வாசற்படியை உடைத்து விட்டோம் என்றால் அது எனது இடத்தில் கட்டியுள்ளதால் இடித்தோம். நாங்கள் இடித்தது சம்பந்தமாக ஆஜர் எதிரிகள் கொடுத்த புகாராருக்காக தான் நான் பொய்யாக அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் மேற்படி வாசற்படியை இடித்தபோது கீழே விழுந்ததால் மொக்க காயம் ஏற்பட்டதால் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் இடம் சம்பந்தமாக தாக்கல் செய்த சிவில் வழக்கில் எதிரிகள் என்னை கேட்டதால் தான் நான் பொய்யாக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. மேற்படி வாசற்படியை இடித்த போது நாங்கள் 3 பேரும் சேர்ந்து ஆஜர் எதிரிகள் இருவரையும் தடியாலும், கையாலும் 1ம் எதிரியை அடித்தால் அவருக்கு பெருங்காயங்கள் ஏற்பட்டு ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றும், அதன் அடிப்படையில் CC No.172/2024 குற்ற எண்.186/2023 என்ற வழக்கை என் மீது தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்காகும். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.03 18:28:00 +0530